# ஜ்ஸகாத் யார்மீது கடமை?

ஒவ்வொரு அறிவாற்றலுடைய, வயது வந்த, சுதந்திரமான முஸ்லிம் மீதும் அவரிடத்தில் ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாக்கப்பட்டுள்ள செல்வம் இருநது, அத்துடன் அது அவரிடம் ஒரு ஆண்டு காலமாக அவர் வசம் இருக்குமேயானால் அவர்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும். எந்த பொருளின்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாக்கப்பட்டுள்ளதோ அவற்றில் கீழ்க்கண்ட விஷயங்கள் பெறப்படவேண்டும்.

1. அந்தப் பொருள்மீது அவருக்கு முழு உரிமை இருக்கவேண்டும்
2. அது அவருடைய பங்குடையதாக தன் பெயரில் இருக்கவேண்டும்
3. ஜ்ஸகாத் கொடுப்பதற்கான நிஸாப் அளவிற்கு இருக்கவேண்டும்
4. தன்னுடைய அனைத்து அடிப்படைத் தேவைகளுக்கும் மிஞ்சியதாக இருக்க வேண்டும்.
5. அது அவர்வசம் வந்தபின் ஓராண்டு காலம் ஆகியிருக்கவேண்டும்.
6. அதன் உரிமையாளர்மீது வேறு கடன் இருக்கக்கூடாது.

www.uzairfalahi.com

## குழந்தைகளின் செல்வத்தின்மீதான ஜ்ஸகாத்

சிறு குழந்தைகளின் சொத்துக்கள் நிஸாப் அளவிற்கு அதிகமாக இருக்குமானால் அதன்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும். அதற்கான நிஸாப் கீழ்வருமாறு:

**தங்கம்:** தங்கத்திற்கான நிஸாப் இருபது தீனார் அல்லது ஏழரை தேலா, அதாவது ஏறத்தாழ **85** கிராம் தங்கம்

**வெள்ளி:** வெள்ளிக்கான நிஸாப் இருநூறு திர்ஹம் அல்லது ஐம்பத்து இரண்டரை தேலா. இந்த இரண்டிற்குமான ஜ்ஸகாத் இரண்டரை சதவீதம் அல்லது நாற்பதில் ஒரு பங்கு. தங்கம் வெள்ளிக்கான ஜ்ஸகாத் கொடுக்காதவர்களுக்கு அல்லாஹ் தஆலா மிகக் கடுமையான தண்டனையைப் பற்றி எச்சரித்துள்ளான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَٱلَّذِينَ يَكۡنِزُونَ ٱلذَّهَبَ وَٱلۡفِضَّةَ وَلَا يُنفِقُونَهَا فِي سَبِيلِ ٱللَّهِ فَبَشِّرۡهُم بِعَذَابٍ أَلِيمٖ

﴿٣٤﴾ يَوۡمَ يُحۡمَىٰ عَلَيۡهَا فِي نَارِ جَهَنَّمَ فَتُكۡوَىٰ بِهَا جِبَاهُهُمۡ وَجُنُوبُهُمۡ وَظُهُورُهُمۡۖ هَٰذَا مَا

كَنَزۡتُمۡ لِأَنفُسِكُمۡ فَذُوقُواْ مَا كُنتُمۡ تَكۡنِزُونَ ﴿٣٥﴾ (التوبة 34، 35)

*பொருள்: எவர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமலிருக்கின் றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கின்றது எனும் நற்செய்தியினை நீர் அறிவிப்பீராக. ஒரு நாள் வரும், அந்நாளில் இதே தங்கமும் வெள்ளியும் நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சப்பட்டு பிறகு அவற்றால் அவர்களின் நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும் முதுகுகளி லும் சூடு போடப்படும். இவைதாம் நீங்கள் உங்களுக்காக சேகரித்து வைத்திருந்த கருவூலங்கள். எனவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த செல் வத்தைச் சுவையுங்கள். (அத்தவ்பா:34,35).*

பெண்களுக்கான நகைகள் அவர்கள் தங்கள் அன்றாட தேவைக்காக அதா வது அழகு அலங்காரத்திற்காக பயன்படுத்தக்கூடியவைகளாயிருந்தால் அவற்றின்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கடமையல்ல. இருப்பினும், எந்த நகைகள் வியாபாரத்திற்காகவோ அல்லது தங்கள் சொத்துக்களை அதிகரிப் பதற்காகவோ வாங்கி வைக்கப்பட்ட நகைகள்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும். இதுபோன்றே, ஆண்கள் தங்கத்தை, அது அவர்களுக்கு ஹராமானதாக இருந்தும், அதனை அலங்காரத்திற்காகப் பயன்படுத்தி னால் அதன்மீதும் ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

## ரொக்கம், நோட்டுக்கள் மற்றும் நாணயங்களின்மீது ஜ்ஸகாத்

நோட்டுக்களாகவும் நாணயங்களாகவும் வைக்கப்பட்டிருக்கும் சொத்து தங்கம் மற்றும் வெள்ளியாகவே கருதப்படும். அதன் மீதான ஜ்ஸகாத் தங்கம் மற்றும் வெள்ளியின் மீதான விதிகளின்படியே கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பணத்தினால் ஜ்ஸகாத் கடமையாகும் நிஸாப் அள விற்கு தங்கம் அல்லது வெள்ளி வாங்கிக்கொள்ள முடியுமானால் அதன் மீதும் இரண்டரை சதவீதம் அல்லது நாற்பதில் ஒருபங்கு ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

## வியாபாரப்பொருட்களின் மீதான ஜ்ஸகாத்

அமீருல் முஃமினீன் ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் ஒருமுறை கடைத்தெரு விற்குச் சென்றார்கள். தோல் மற்றும் பாத்திரங்களை விற்றுக்கொண்டி ருந்த ஒரு வியாபாரியிடம் சென்று உன்னுடைய பொருட்களுக்கான ஜ்ஸகாத்தைக் கொடு என்று கூறினார்கள். அவர் கூறினார், அமீருல் முஃமினீன் அவர்களே, இது தோல், இதன்மீது என்ன ஜஸ்காத் கொடுக்க வேண்டும்? அவர்கள் கூறினார்கள், இதனை மதிப்பிட்டு அந்த மதிப்பின் மீது ஜ்ஸகாத் கொடுங்கள் (அஹ்மத், தாரு ஃகுத்னி, பைஹஃகி). ஒரு வியாபாரியினுடைய வியாபாரப் பொருட்கள்மீதான ஜ்ஸகாத் கொடுக்

www.uzairfalahi.com

கும் முறை எவ்வாறு இருக்கவேண்டும் என்றால், அவர் ஆண்டின் இறுதியில் தன்னுடைய அனைத்து வியாபாரப் பொருட்கள், சரக்குகளின் மதிப்பீடு செய்து, அதன் மொத்த மதிப்பு நிஸாபுடைய அளவை எட்டியிருக்குமானால் அதன்மீது இரண்டரை சதவீதம் ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும். இதற்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு:

1 **வியாபாரப் பொருட்களின் மதிப்பு தங்கம் வெள்ளியின் நிஸாபின் அளவிற்கு இருக்கவேண்டும்.**

2 **அதன்மீது ஓராண்டு காலம் முடிந்திருக்கவேண்டும்.**

3 **அனைத்துப் பொருட்களும் வியாபாரத்திற்காகவே கொள்முதல் செய்யப்பட்டவையாக இருக்கவேண்டும், தம்முடைய சொந்த பயன்பாட்டிற்காகவோ வியாபாரத்திற்கல்லாத வேறு காரணத்திற்காகவோ வாங்கப்பட்டவையாக இருக்கக்கூடாது.**

4 **அனைத்துப் பொருட்களுக்கும் அவரே சொந்தக்காரராக இருக்கவேண்டும்**

**தானியங்கள் மற்றும் விளைபொருட்கள் மீதான ஜ்ஸகாத்**

அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَنفِقُواْ مِن طَيِّبَٰتِ مَا كَسَبۡتُمۡ وَمِمَّآ أَخۡرَجۡنَا لَكُم مِّنَ ٱلۡأَرۡضِۖ ٢٦٧ البقر 267)

*பொருள்:இறைநம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் சம்பாதித்த பொருட்களின்மீதும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித்தந்தவற்றிலிருந்தும் சிறந்தவற்றை இறைவனின் வழியில் செலவு செய்யுங்கள் (அல் பஃகரஹ்:267). மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

وَءَاتُواْ حَقَّهُۥ يَوۡمَ حَصَادِهِۦۖ ١٤١ الأنعا 141)

*பொருள்: அவற்றின் அறுவடை நாளில் அல்லாஹ்வுக்குரிய பங்கினைக் கொடுத்துவிடுங்கள் (அல் அன்ஃஆம்:141).*

இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களிடத்தில் பூமியிலிருந்து விளையும் ஒவ்வொரு விளைபொருளின்மீதும் அதன் மூலமாக அந்த பூமியை பயிரிடுவதற்காக மேலும் மேம்படுத்துவது நோக்கமானால் ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும். இவ்வகையில், எரிபொருளாகப் பயன்படும் விறகு, மூங்கில், புற்பூண்டுகள் மற்றும் பழம்தரா மரங்கள் ஆகியனவிதிவிலக்காகும். இமாம் ஷாஃபிஈ (ரஹ்) மற்றும் இமாம் மாலிக் (ரஹ்) அவரகளுடைய கருத்தின்படி எடை போடப்படும் ஒவ்வொரு பொருள் மற்றும் உணவிற்காக பயன்



www.uzairfalahi.com

படுத்தப்படும் பொருட்களின்மீதும் ஜ்ஸகாத் கொடுப்பது வாஜிபாகும். இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், அவை உணவுக்காப் பயன்படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அதன்மீது ஜ்ஸகாத் கொடுப்பது வாஜிபாகும். அப்பாசியப் பேரரசின் கஹ்லீஃபா வான அல்ஹாதி காய்க்கறிகளின்மீது ஜ்ஸகாத் கொடுப்பது கட்டாய மானதாக ஆக்கியபோது, இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்கள் தன்னு டைய கருத்தைத் தெரிவித்தார்கள், இது ஏழை எனிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### தானியங்கள் மற்றும் பழவகைகளின் மீதான ஜ்ஸகாத்தின் நிஸாப்

*தானியங்கள் மற்றும் பழவகைகளின் அளவு 5 வசஃக் (4 இராத்தல் அல்லது 8 பவுண்டு) அளவிற்கு இருக்குமானால் அதன்மீது ஜ்ஸகாத் கொடுப்பது வாஜிபாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், 5 வசஃக்கிற்குக் குறைவாக இருப்பின் அதன்மீது ஜ்ஸகாத் கொடுக்கத்தேவையில்லை (பெரும்பாலான முஹத்தித்ஸீன்கள்).*

இப்பொருட்களை வகைப்படுத்தும் முறையில் விளை நிலங்களைப் பொருத்து வெவ்வேறு விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு விளைச் சல் இயற்கையான மழைநீரினால் பாய்ச்சப்பட்டு அறுவடை செய்யப் பட்டதோ அதன்மீது **உஷ்ரு** (பத்தில் ஒரு பங்கு) ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும், மற்றும் எந்த விளைச்சல் செயற்கையான முறையில் நீரிறைக் கப்பட்டு அதன்மூலம் அறுவடை செய்யடப்பட்டதோ அதில் **உஷ்ரில் பாதி** (இருபதில் ஒரு பங்கு) கொடுக்க வேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**فِيمَا سَقَتِ السَّمَاءُ وَالعُيُونُ أَوْ كَانَ عَثَرِيًّا العُشْرُ، وَمَا سُقِيَ بِالنَّضْحِ نِصْفُ العُشْرِ متفق عليه )**

*பொருள்: எந்த விளைச்சல் வானத்திலிருந்து பொழியும் மழை நீரினாலோ அல்லது இயற்கையான குளங்கள் நிர்த்தேக்கங்களினாலோ அறுவடை செய்யப்படுகிறதோ அதில் **உஷ்ரு** பத்தில் ஒரு பங்கும் எந்த விளைச்சல் செயற்கையான முறையில் நீரிறைக்கப்பட்டு அதன்மூலம் அறுவடை செய் யப்பட்டதோ அதில் **உஷ்ரில் பாதி** (இருபதில் ஒரு பங்கு) கொடுக்க வேண் டும்.* ( متفق عليه தானியங்கள் மற்றும் பழவகைகளின் மீதான ஜ்ஸகாத் அவை பழுத்த பிறகு அறுவடைக்குப்பின் கொடுக்கப்படும், இவ்வாறே அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்:

**وَءَاتُوا۟ حَقَّهُۥ يَوْمَ حَصَادِهِۦ ﴿١٤١﴾ الأنعا 41 )**

www.uzairfalahi.com

*பொருள்: அவற்றின் அறுவடை நாளில் அல்லாஹ்வுக்குரிய பங்கினைக் கொடுத்துவிடுங்கள் (அல் அன்ஃஆம்:141).* நல்லவற்றைத் தமக்காக வைத்துக்கொண்டு கெட்டவைகளை ஜ்ஸகாத்தாகக் கொடுக்கக்கூடாது. *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَنفِقُواْ مِن طَيِّبَٰتِ مَا كَسَبۡتُمۡ وَمِمَّآ أَخۡرَجۡنَا لَكُم مِّنَ ٱلۡأَرۡضِۖ وَلَا تَيَمَّمُواْ ٱلۡخَبِيثَ مِنۡهُ تُنفِقُونَ وَلَسۡتُم بِـَٔاخِذِيهِ إِلَّآ أَن تُغۡمِضُواْ فِيهِۚ وَٱعۡلَمُوٓاْ أَنَّ ٱللَّهَ غَنِيٌّ حَمِيدٌ ٢٦٧ البقر 267 )

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் சம்பாதித்த பொருட்களின்மீதும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித்தந்தவற்றிலிருந்தும் சிறந்தவற்றை இறைவனின் வழியில் செலவு செய்யுங்கள். அவற்றில் மோசமான பொருள்களைத் தேர்ந்தெடுத்து அவனுடைய வழியில் நீங்கள் செலவு செய்ய முற்படாதீர்கள். உண்மையில் அதுபோன்ற மோசமான பொருட்களை உங்களுக்கு எவரேனும் கொடுத்தால் அதனை நீங்கள் விரும்பமாட்டீர்களே. அல்லது கண்டும் காணாமலேதானே அதனை ஏற்றுக்கொள்வீர்கள்? நிச்சயமாக அல்லாஹ் தன்னிறைவுள்ளவனும் மாபெரும் புகழுடையோனுமயாய் இருக்கின்றான். (அல் பஃகரஹ்:267).*

ஒரு விவசாயி தன்னுடைய விவசாயத்திற்கான முதலீடு, பாசனத்திற்கான செலவுகளைத்தவிர மற்ற செலவினங்களுக்காக கடன் வாங்கியிருந்தால் அதனை அவனுக்குக் கிடைத்த விளைச்சலிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும், அதில் அந்த நிலத்தின் தீர்வை மற்றும் வரிகளும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதற்குப்பின் எது மீதமாக இருக்குமோ அதற்கான ஜ்ஸகாத் மட்டும் அவன் செலுத்தவேண்டும். உதாரணமாக, ஒருவர் தன்னுடைய நிலத்தில் பத்து குவிண்டால் பருத்தி சாகுபடி செய்தார், அந்த பத்து குவிண்டால் மீது மொத்த முதலீட்டுச்செலவு, பாசனத்திற்கான செலவு ஆகியவை சேர்த்து மூன்று குவிண்டால் பருத்தியை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்குமோ அவ்வளவு இருக்குமானால், அவர் ஏழு குவிண்டால் பருத்தியின் மதிப்பின்மீது ஜ்ஸகாத் கொடுக்க வேண்டும். இந்நிலையில், இயற்கையான முறையில் மழைத்தண்ணீர் பாசனத்தின் மூலம் சாகுபடி செய்திருப்பாரேயானால் பத்தில் ஒரு பங்கும், செயற்கையான முறையில் பாசனம் செய்திருப்பாரேயானால் இருபதில் ஒரு பங்கும் ஜ்ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்தில் சாகுபடி செய்தால், விளைச்சல் மீதான ஜ்ஸகாத் குத்தகைக்காரர்மீது கடமையாகும், நிலத்தின் சொந்தக்காரர்மீது கடமையாகாது. அனைத்து உலமாக்களின் கருத்தும் இதுவே.

www.uzairfalahi.com

## தேன் மீதான ஜ்ஸகாத்

சில மார்க்கச் சட்ட அறிஞர்கள் தேனின்மீது ஜ்ஸகாத் எதுவும் கிடையாது எனக்கூறுகின்றனர். மேலும், சில அறிஞர்கள் இது தானியங்கள் மற்றும் பழங்களைப்போன்றதாகவே உள்ளது, இதனை நிறுத்தும் விநியோகம் செய்கின்றனர் மற்றும் சேமித்தும் வைக்கின்றனர், இதனைக் கொள்முதல் மற்றும் விற்பனையும்செய்கின்றனர். ஆகவே, இதன்மீது ஜ்ஸகாத் கடமை என்ற கருத்தினைக்கொண்டிருக்கின்றனர். இதிலும் ஜ்ஸகாத்தின் விகிதம் பத்தில் ஒரு பங்காகும். ஆனால், இமாம் ஷவ்க்கானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், இதனைப்பற்றிக் குறிப்பிடுகின்ற அனைத்து நபிமொழிகளும் வலுவான ஆதாரங்களாக இல்லை, ஆகவே, இதன் அடிப்படையில், இதனை ஆதாரமாகக் கொண்டு முடிவு ஏதும் செய்யமுடியாது.

* * *

www.uzairfalahi.com